உ
தேவி துணை

# அபிராமி அம்மை பதிகம்



## காந்தளகம்

213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தேவி துணை

# அபிராமி அம்மை பதிகம்



அச்சுப் பதிவு

ஸ்ரீ காந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

உரிமைபதிவு] 1978 [விலை -75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பதிப்புரை

திருக்கடவூரில் எழுந்தருளி அருள்புரிகின்ற உலக மாதாவைத் தம் உள்ளத்திருத்தி உள்ளொளியும் புற ஒளியும் பெற்ற ஞானவான் அபிராமி பட்டர். இவர் தென்மொழி, வடமொழிப் புலமையும், சங்கீத ஞானமும் நிறைந்தவர்.

உலக மாதாவாகிய அன்னை அபிராமியிடம் இறவாத அன்புபூண்டவர். இவர் உள்ளமாகிய சிங்காதனத்தில் அம்மை எழுந்தருளியிருந்து செய்யுந் திருவிளையாடல்களைக்கண்டு களிப்பவர், அபிராமியின் பூரண அருள் பெற்றவர். இவர் அபிராமி அருள்வழி காலத்துக்குக்காலம் பலதிருப்பாடல்களைச் செய்தருளினார். இவர் பாடிய பாடல்களில் அபிராமி அம்மை பதிகமும் ஒன்று. இப்பதிகத்தை தேவி உபாசகர்கள் பாராயணஞ் செய்து தேவி திருவருளைப் பெருக்குவார்கள். இதற்கு இசைவாக அபிராமி அம்மை பதிகம் என்னும் இத்தோத்திர நூலைத் தொகுத்து வெளியிட்டுள்ளோம்.

மறவன்புலோ.
5-12-78.

மு. கணபதிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
தேவிதுணை

# அபிராமி அம்மை பதிகம்

## காப்பு

தூயதமிழ்ப் பாமாலை சூட்டுதற்கு மும்மதன்நால்
வாயைங் கரன்றுள் வழுத்துவாம் — நேயர்நிதம்
எண்ணும் புகழ்கடவூர் எங்கள்அபி ராமவல்லி
நண்ணும்பொற் பாதத்தில் நன்கு.

## பதிகம்—1

கங்கையொடு தும்பையும் அணிந்தவர் விளக்குங்
கலாமதியை நிகர்வதனமுங்
கருணைபொழி விழிகளும் விண்முகில்கள் வெளிறெனக்
காட்டிய கருங்கூந்தலுஞ்
சங்கையில் லாதொளிரு மாங்கல்ய தாரணந்
தங்குமணி மிடறு மிக்க
சதுர்பெருகு துங்கபா சாங்குசம் இலங்குகர
தலமுவிர லணியும் அரவும்
புங்கவர்க் கமுதருளு மந்தரகு சங்களும்
பொலியுநவ மணி நூபுரம்
பூண்டசெஞ் சேவடியை நாளும் புகழ்ந்துமே
போற்றியென வாழ்த்தவிடை மேல்
மங்கள மிகுந்தநின் பதியுடன் வந்தருள்செய்
வளர்திருக் கடவூரில் வாழ்
வாமி! சுபநேமி! புகழ் நாமிசிவ சாமிமகிழ்
வாமி அபிராமி! உமையே! (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திர சடாதரி முகுந்தசோ தரி! துங்க
சலசலோ சனமா தவி!
சம்ப்ரம பயோதரி! சுமங்கலி! சுலட்சணி
சாற்றருங் கருணாகரி!
சுந்தரி! வராகி! சாம்பவி! அமர சோதரி
அமலை! செக சால சூத்ரி!
அகிலாத்ம காரணி! விநோதசய நாரணி!
அகண்டசின் மய பூரணி
சுந்தரி! நிதந்தரி! துரந்தரி வரை ராச
சுகுமாரி! கௌமாரி! உத்
துங்கல் யாணி! புஷ் பாஸ்திராம் புயபாணி
தொண்டர்கட் கருள்சர் வாணி!
அந்தரி! மலர்ப்பிரம ராதிதுதி வேதவொலி
வளர் திருக்கடவூ ரில் வாழ்
வாமி! சுப நேமி! புகழ்நாமி! சிவசாமி மகிழ்
வாமி அபிராமி உமையே. (2)

வாசமலர் மருவளக பாரமும் தண் கிரண
மதிமுகமும் அயில்விழி களும்
வள்ள நிகர் முலையுமான் நடையு நகை மொழிகளும்
வளமுடன் கண்டு மின்னார்
பாசபந்தத்திடை மனங்கலங் கித்தினம்
பலவழியும் எண்ணி யெண்ணிப்
பழிபாவம் இன்னதென் றறியாமல் மாயப்ர
பஞ்ச வாழ் வுண்மை யென்றே
ஆசைமே விட்டுவீ ணாகநாய் போல்திரிந்(து)
அலைவதல் லாமல் உன்றன்
அம்புயப் போதெனுஞ்செம்பதந் துதியாத
அசடன் மேற் கருணை வருமோ?
மாசிலா தோங்கிய குணாகரி பவானிசீர்
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமி மகிழ்
வாமி! அபி ராமி! உமையே! (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றென்று தீதென்று நவிலுவிவ் விரண்டினுள்
நவின்றதே உலகிலுள்ளோர்
நாடுவார் ஆதலில் நானுமே அவ்விதம்
நாடினேன் நாடி னலும்
இன்றென்று சொல்லாமல் நினது திரு வுள்ள(மது)
திரங்கி யருள் செய்கு வாயேல்
ஏழையேன் உய்குவேன் மெய்யான மொழியிஃதுன்
இதயமறி யாத துண்டோ?
குன்றமெல் லாம் உறைந்(து) தென்றுமன் பர்க்கருள்
குமாரதே வனையளித்த
குமரி! மர கதவருணி! விமலி! பை ரவி கருணை
குலவுகிரி ராச புத்ரி!
மன்றல் மிகு நந்தன வனங்கள் சிறை அளிமுரல
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமி மகிழ்
வாமி! அபி ராமி! உமையே! (4)

ஒருநாள் இரண்டுநாள் அல்லநாள் உலகத்து
உதித்ததுந் நாள்வ ரைக்கும்
ஒழியாத கவலையால் தீராத இன்னல் கொண்(டு)
உள்ளந் தளர்ந்து மிகவும்
அருநாண் இயற்றிட்ட விற்போல் இருக்குமிவ்
வடிமைபாற் கருணை கூர்ந்து
அஞ்சேலெ னச்சொல்லி ஆதரிப் பவர்கள்உனை
யன்றியிலை உண்மையாக
இருநாழி கைப்போதும் வேண்டாது நிமிடத்தில்
இவ்வகில புவனத் தையும்
இயற்றியரு ளுந்திறங் கொண்டநீ ஏழையேன்
இன்னல்தீர்த் தருளல் அரிதோ?
வருநாவ லூரர்முத லோர்பரவும் இனியபுகழ்
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி! சுப நேமி! புகழ்நாமி! சிவ சாமி மகிழ்
வாமி! அபி ராமி! உமையே! (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கை இல்லாத துன்பங்கள் மேன்மேல்
ஏறிட் டொறுக்க அந்தோ!
எவ்விதம் உளஞ்சகித் துய்குவேன் இப்பொழுது
எடுத்திட்ட சன்மம் இதனில்
நண்ணியென் னளவுசுக மானதொரு நாளினும்
நான்அனு பவித்த தில்லை
நாடெலாம் அறியுமிது கேட்பதேன்? நின்னுளமும்
நன்ருய் அறிந்தி ருக்கும்,
புண்ணியம் பூர்வசன னத்தினிற் செய்யாத
புலைய னுலும் நினது
பூரண கடாட்சவீட் சண்ணியஞ் செய்தெனது
புன்மையை அகற்றி யருள்வாய்
மண்ணவர்கள் விண்ணவர்கள் நித்தமும் பரவுமிசை
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவசாமி மகிழ்
வாமி! அபி ராமி! உமையே! (6)

தெரிந்தோ அலாதுதெரி யாமலோ இவ்வடிமை
செய்திட்ட பிழையி ருந்தால்
சினங்கொண்ட தோர்கணக் காகவை யாதுநின்
திருவுளம் இரங்கி மிகவும்
பரிந்துவந் தினியேனும் பாழ்வினையில் ஆழ்ந்(து) இனற்
படாதுநல் வரம்அ ளித்துப்
பாதுகாந் தருள்செய்ய வேண்டும்அண் டாண்டவுயிர்
பரிவுடன் அளித்த முதல்வி!
புரந்தரன் போதன்மா தவருதி யோர்கள்துதி
புரியும்பா தாம்பு யமலர்ப்
புங்கவி! புராந்தரி! புரந்தகி! புராதனி!
புராணி! திரி புவனே ஸ்வரி!
மருந்தினும் நயந்தசொற் பைங்கிளிவ ராகி! எழில்
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி! சுபநேமி! புகழ் நாமி! சிவ சாமி மகிழ்
வாமி! அபி ராமி! உமையே! (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சகக் கொடியோர்கள் நட்புவேண் டாமலும்
மருந்தினுக் காவேண் டினும்
மறந்துமோர் பொய்ம்மொழி சொலாமலுந் தீமையாம்
வழியினிற் செல்லா மலும்
விஞ்சுநெஞ் சதனிற் பொறாமைதரி யாமலும்
வீண்வம்பு புரியா மலும்
மிக்கபெரி யோர்கள்சொலும் வார்த்தைதள் ளாமலும்
வெகுளியவை கொள்ளா மலும்
தஞ்சமென தின(து) உபய கஞ்சந்து தித்திடத்
தமியேனுக் கருள்பு ரிந்து
சர்வகா லமுமெனைக் காத்தருள் வேண்டினேன்
சலக்கயல்கள் விழியை அனைய
வஞ்சியர்செவ் வாய்நிகரு வாவியாம் பன்மலரும்
வளர்திருக் கடலூ ரில் வாழ்
வாமி சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமி மகிழ்
வாமி! அபி ராமி! உமையே! (8)

எனதின்னல் இன்னபடி யென்றுவே ரொருவர்க்(கு)
இசைத்திடவும் அவர்கள் கேட்(டு) இவ்
வின்னல்தீர்த் துள்ளத்(து) இரங்கிநன் மைகள்செயவும்
எள்ளளவு மடியாதுநின்
உனதமரு வுங்கடைக் கண்ணருள் சிறிதுசெயின்
உதவாத நுண்மணல் களும்
ஓங்குமாற் றுயர்சொர்ண மலையாகும் அதுவன்றி
உயரகில புவனங் களைக்
கனமுடன் அளித்துமப் பத்திரண் டறங்களும்
கவின்பெறச் செய்யு நின்னைக்
கருதுநல் லடியவர்க் கெளிவந்து சடுதியிற்
காத்துரட் சித்த தோர்ந்து
வனசநிகர் நின்பாதம் நம்பினேன்; வந்தருள் செய்
வளர்திருக் கடலூரில் வாழ்
வாமி! சுப நேமி புகழ்நாமி சிவ சாமி மகிழ்
வாமி! அபி ராமி! உமையே! (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருநீல வடிவமார் மாடேறி உத்தண்ட
    கனதண்ட வெம்பா சமுங்
கைக்கொண்டு சண்டமா காலன்முன் எதிர்க்கமார்க்
    கண்டன் வெகுண்டு நோக்க
இருநீல கண்டனெனும் நின்பதியை உள்ளத்தில்
    இன்புகொண் டருச்சனைசெய
ஈசனவ் விலிங்கம் பிளப்பநின் னோடுதோன்றி
    யமனைச்சூ லத்தி லூன்றிப்
பெருநீல மலையென நிலத்தில்அன் னவன்விழப்
    பிறங்குதா ளால்உ தைத்துப்
பேசுமுனி மைந்தனுக் கருள்செய்த துனதரிய
    பேரருளின் வண்ண மலமோ?
வருநீல மடமாதர் விழியென்ன மலர்வாவி
    வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி! சுபநேமி! புகழ் நாமி! சிவ சாமி மகிழ்
    வாமி! அபி ராமி! உமையே! (10)

சகலசெல் வங்களும் தரும் இமய கிரிராச
    தனயைமா தேவி நின்னைச்
சத்யமாய் நித்யமுள் ளததில்து திக்குமுத்
    தமருச்(கு) இரங்கி மிகவும்
அகிலமதில் நோயின்மை கல்விதன தானியம்
    அழகுபுகழ் பெருமை இளமை
அறிவுசந் தானம்வலி துணிவுவாழ் நாள்வெற்றி
    ஆகுநல் லூழ்நு கர்ச்சி
தொகை தரும் பதினாறுபேறும்தந் தருள்நீ
    சுகானந்த வாழ் வளிப் பாய்,
சுகிர்தகுண சாலி! பரி பாலி! அநு கூலி! திரி
    சூலி!மங் களவி சாலி!
மகவு நான்! நீதாய் அளிக்கொணு தோ? மகிமை
    வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி! சுபநேமி! புகழ் நாமி! சிவ சாமி மகிழ்
    வாமி! அபி ராமி! உமையே! (11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
தேவிதுணை

# அபிராமி அம்மை பதிகம்

## பதிகம் — 2

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையுங் குன்றாத இளமையும்
கழுபிணியு லாத உடலும்
சலியாத மனமும் அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள்வா ராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உத விப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்;
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரளக பந்தியும் பந்தியின் அலங்கலும்
    கரியபுரு வச்சி லைகளும்
கர்ணகுண் டலமுமதி முகமண் டலம்நுதற்
    கத்தூரிப் பொட்டு மிட்டுக்
கூரணிந் திடுவிழியும் அமுதமொழி யுஞ்சிறிய
    கொவ்வையின் கனிய தரமும்
குமிழனைய நாசியும் குந்தநிகர் தந்தமும்
    கோடுசோ டான களமும்
வாரணிந் திருமாந்த வனமுலையும் மேகலையும்
    மணிநூ புரப்பா தமும்
வந்தெனது முன்னின்று மந்தகா சமுமாக
    வல்வினையை மாற்று வாயே
ஆரமணி வானிலுறை தாரகைகள் போலநிறை
    ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
    அருள்வாமி! அபிராமி யே! (2)

மகரவார் குழல்மேல் அடர்ந்து குமிழ் மீதினில்
    மறைந்து வாளைத் துறந்து
மைக்கயலை வேண்டிநின் செங்கமல விழியருள்
    வரம் பெற்ற பேர்க ளன்றோ?
செகமுழுதும் ஒன்றைத் தனிக்குடை கவித்துமேற்
    சிங்கா தனத்தி லுற்றுச்
செங்கோலும் மனுநீதி முறைமையும் பெற்றமிகு
    திகிரியுல காண்டு பின்பு
புகர்முகக்(து) ஐரா வதப்பாக ராகிநிறை
    புத்தேளிர் வந்து போற்றிப்
போகதே வேந்திரன் எனப்புகழ விண்ணில்
    புலோமிசை யொடுஞ்சு கிப்பர்;
அகரமுத லாகிவளர் ஆனந்த ரூபியே!
    ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
    அருள்வாமி! அபிராமி யே! (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறிகடல்கள் ஏழையுந் திகிரிஇரு நான்கையும்
 மாதிரக் கரியெட் டையும்
மாநாகம் ஆனதையும் மாமேரு என்பதையும்
 மாகூர்மம் ஆனதையு மோர்
பொறியரவு தாங்கிவரு புவனமீ ரேழையும்
 புத்தேழிர் கூட்டத் தையும்
பூமகளை யுந்திகிரி மாயவனை யும்அரையிற்
 புலியாடை உடையானையும்
முறைமுறைக ளாயீன்ற முதியவர்க ளாய்ப்பழைமை
 முறைகள்தெரி யாத நின்னை
மூவுலகி லுள்ளவர்கள் வாலையென்(று) அறியாமல்
 மொழிகின்ற தேது சொல்வாய்
அறிவு நிறை விழிமியர்தம் ஆனந்த வாரியே*
 ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
 அருள்வாமி! அபிராமி யே! (4)

வாடாமல் உயிரெனும் பயிர்தழைத் தோங்கிவர
 அருள்மழை பொழிந்தும் இன்ப
வாரிதியி லேநின்ன தன்பெனுஞ் சிறகால்
 வருந்தா மலேய ணைத்துக்
கோடாமல் வளர்சிற் றெறும்புமுதல் குஞ்சரக்
 கூட்டமுத லான சீவ
கோடிகள் தமக்குப் புசிக்கும் புசிப்பினைக்
 குறையாம லேகொ டுத்து
நீடாழி யுலகங்கள் யாவையும் நேயமாய்
 நின்னுதர பந்தி பூக்கும்
நின்மலீ! அகிலங் களுக்(கு) அன்னை என்றோதும்;
 நீலியென்(று) ஓதுவாரோ?
ஆடாத நான்மறையின் வேள்வியால் ஓங்குபுகழ்
 ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
 அருள்வாமி! அபிராமி யே! (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்குஞ் சரந்தொட் டெறும்புகடை யானதொரு
 பலவுயிர்க் குங்கல் லிடைப்
பட்டதே ரைக்கும்அன் றுற்பவித் திடுகருப்
 பையுறு சீவ னுக்கும்
மல்குஞ் சராசரப் பொருளுக்கும் இமையாத
 வானவர் குழாத்தி னுக்கும்
மற்றுமொரு மூவர்க்கு மியாவர்க்கும் அவரவர்
 மனச்சலிப் பில்லா மலே
நல்குந் தொழிற்பெருமை உண்டா யிருந்துமிகு
 நவநிதி உனக்கி ருந்தும்
நானொருவன் வறுமையிற் சிறியனா னால்அந்
 நகைப்புனக் கேஅல் லவோ?
அல்கலந் தும்பர்நா டளவெடுக் குஞ்சோலை
 ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
 அருள்வாமி! அபிராமி யே! (6)

நீடுல கங்களுக்(கு) ஆதர வாய்நின்று
 நித்தமாய் முத்தி வடிவாய்
நியமமுடன் முப்பத் திரண்டறம் வளர்க்கின்ற
 நீமனை வியாய்இ ருந்தும்
வீடு வீடுகள் டோறும் ஓடிப் புகுத்துகால்
 வேசற்(று) இலச்சை யும்போய்
வெண்டுகில் அரைக்கணிய விதியற்று நிர்வாண
 வேடமுங் கொண்டு கைக்கோர்
ஓடேந்தி நாடெங்கும் உள்ளந் தளர்ந்துநின்(று)
 உன்மத்த னாகி அம்மா!
உன்கணவன் எங்கெங்கும் ஐயம்புகுந் தேங்கி
 உழல்கின்ற தேது சொல்வாய்;
ஆடுகொடி மாடமிசை மாதர்விளை யாடிவரும்
 ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
 அருள்வாமி! அபிராமி யே! (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானந்த மைந்துன் சொரூபத்தை அறிகின்ற
நல்லோர் இடத்தி னிற்போய்
நடுவினி லிருந்துவந் தடிமையும் பூண்டவர்
நவிற்றுப உப தேச முட்கொண்
டனந்த னைத்தள்ளி எனதுநா னெனுமானம்
இல்லாம லேது ரத்தி
இந்திரிய வாயில்களை இறுகப்பு தைத்துநெஞ்(சு)
இருளற விளக்கேற் றியே
ஆனந்த மானவிழி அன்னமே! உன்னைஎன்
அகத்தா மரைப்போ திலே
வைத்துவே றேகவலை யற்றுமே லுற்றபர
வசமாகி அழியாத தோர்
ஆனந்த வாரிதியில் ஆழ்கின்ற தென்றுகாண்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி அபிராமி யே! (8)

சலதியுல கத்திற் சராசரங் களையீன்ற
தாயா கினுமெ னக்குத்
தாயல்ல வோ? யான்உன் மைந்த னன்றோ? எனது
சஞ்சலம் தீர்த்து நின்றன்
முலைசுரந் தொழுகுபா லூட்டிஎன் முகத்தைஉன்
முந்தானை யால்து டைத்து
மொழிகின்ற மழலைக் குகந்துகொண் டிளநிலா
முறுவல்இன் புற்றரு கில்யான்
குலவிவிளை யாடல்கொண் டருண்மழை பொழிந்துஅங்கை
கொட்டி வாவென்(று) அழைத்துக்
குஞ்சரமு கன்கந்த னுக்குஇளையன் என்றெனைக்
கூறினால் ஈனம் உண்டோ?
அலைகடலி லேதோன்று மாறாத அமுதமே
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்போது கொண்டுன் பதப்போது தன்னில்
கணப்போதும் அர்ச்சிக் கிலேன்;
கண்போதி னுலுன் முகப்போது தன்னையான்
கண்டுதரி சனைபுரி கிலேன்;
முப்போதில் ஒருபோதும் என்மனப் போதிலே
முன்னிஉன் ஆல யத்தின்
முன்போது வார்தமது பின்போத நினைகிலேன்
மோசமே போய்உ ழன்றேன்
மைப் போத கத்திற்கு நிகரெனப் போதொரு
மைக்கடா மீதேறியே
மாகோர காலன் வரும்போது தமியேன்
மனங்கலங் கித்தி யங்கும்
அப்போது வந்துன் அருட்போது தந்தருள்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! (10)

மிகையுந் துரத்தவெம் பிணியுந் துரத்த
வெகுளி யானதுந் துரத்த
மிடியுந் துரத்தநரை திரையும் துரத்தமிகு
வேதனை களுந்து ரத்த
பகையுந் துரத்தவஞ் சனையுந் துரத்த
பசியென் பதுந்து ரத்த
பாவந் துரத்தபதி மோகந் துரத்த
பலகா ரியமுந் துரத்த
நகையுந் துரத்தஊழ் வினையுந் துரத்த
நாளுந் துரத்த வெகுவாய்
நாவரண் டோடிகால் தளர்ந்திடும் என்னை
நமனுந் துரத்து வானே?
அகிலவு லகங்கட்கும் ஆதார தெய்வமே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே! (11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமய நூல்கள்

## விநாயகர்

| | |
|---|---|
| பிள்ளையார் கதை | 2-00 |
| பிள்ளையார் புராணம் உரையுடன் | 2-50 |
| விநாயகர் தோத்திரமாலை | 2-50 |

## சிவபெருமான்

| | |
|---|---|
| சிவராத்திரி புராணம் உரையுடன் | 15-00 |
| சிவராத்திரி மகிமை | 2-00 |
| திருவஞ்செழுத்து | 1-00 |
| சிவஞான போதம் | 1-25 |
| பன்னிருதிருமுறைத் தோத்திரத்திரட்டு | 5-00 |
| கோளறு திருப்பதிகம் | -40 |
| சிவநெறித் தோத்திரத் திரட்டு | 2-50 |
| சிவபுராணம் | -50 |
| திருக்கேதீச்சரமணவாளர்மாலை | -60 |
| திருமுறைகளும் தோத்திரப்பாடலும் | 2-00 |
| தோத்திரமாலை | -75 |
| நடராசப்பத்து (சிவநாமாவழியுடன்) | -40 |

## உமாதேவி

| | |
|---|---|
| அபிராமியந்தாதி | 1-75 |
| அபிராமி அம்மை பதிகம் | -75 |
| அபிராமி மகிமை | 2-50 |
| தேவி தோத்திரத் திரட்டு | 1-00 |
| நவராத்திரிப் பாமாலை | 1-00 |
| மாரியம்மன் தாலாட்டு | 1-25 |
| சகலகலாவல்லிமாலை | -50 |

## சுப்பிரமணியர்

| | |
|---|---|
| கந்தரலங்காரம் | -50 |
| கந்தரநுபூதி | -50 |
| கந்தசஷ்டி கவசம் | -75 |
| திருமுருகாற்றுப்படை | -40 |
| எட்டிக்குடி யேசல் | -40 |
| கதிர்காமமுருகன் கீர்த்தனங்கள் | -75 |
| கதிர்காம வேலவர் | 1-50 |
| திருப்புகழ் | 5-00 |
| சண்முக கவசம் | -40 |
| திச்ருசெந்தூரகவல் | -75 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org